பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 03 புதன்கிழமை (19 08 1992) UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 265

# ஆஸ்பத்திரி பாதுகாப்பு வலயம் மீது ராணுவத்தினர் நேற்றுத் தாக்குதல்

## பரவலாக பல இடங்களிலும் சன்னங்கள் விழுந்து சிதறின

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 19

மண்டைதீவுப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நேற்று யாழ். நகரப் பகுதியை நோக்கி 50 கலிபர் தாக்குதல்களை நடத்தினர்.

படையினரின் வேட்டுகள் — பாதுகாப்பு பிராந்தியமாக அறிவிக்கப்பட்டிருக்கும் — யாழ். ஆஸ்பத்திரி வலயத்துக்குள் அடுத்தடுத்து வந்து வீழ்ந்தன.

இதனால் யாழ். ஆஸ்பத்திரிக்குப் பின்புறம் — மின்சார நிலைய வீதிப் பகுதியில் இருந்த — பல கடைகள் சேதமாகின. மினி பஸ் ஒன்றின் கண்ணாடி உடைந்தது. நகரில் இருந்த பல கடைகள் கட்டடங்களை வேட்டுகள் துளைத்தன.

நேற்றுக் காலை சுமார் 10 45 மணியிலிருந்து சுமார் 15 நிமிட நேரம் நீடித்த இத் தாக்குதலினால் நகரில் கூடியிருந்த மக்கள் அல்லோல கல்லோலப்பட்டு சிதறி ஓடி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் விரும்பும் தலைவர் வரிசையில் பிரபாகரன்

மணிலா, ஆக. 19

'நான் விரும்பும் தலைவர்' என்ற தலைப்பில் வெரித்தாஸ் வானொலி நடத்திய போட்டியில் — உலகத் தலைவர்களிடையே — முதல் நான்கு இடங்களைப் பெற்றவர்களுள் ஒருவர் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் என்று அறிவிக்கப்படுகிறது.

முதலாவது இடத்தை முன்னாள் சோவியத் தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவும், இரண்டாம் இடத்தை மகாத்மா காந்தியும், மூன்றாம் இடத்தை நெல்சன் மண்டேலாவும், நான்காவது இடத்தை விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன், இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் ஆகியோரும் பெற்றுள்ளனர்.

போட்டியில் கலந்துகொண்டவர்களில் கூடுதலானோர் தெரிவித்த அபிப்பிராயத்தின் படியே இத்தெரிவு இடம்பெற்றது.

திரு. பிரபாகரன் அவரின் வீரம், இலட்சியத்துக்காக பலரின் அபிமானத்தை பெற்றிருக்கின்றார் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## செஞ்சிலுவை அதிகாரிகள் நேரில் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 19

யாழ் ஆஸ்பத்திரி பாதுகாப்பு வலயத்தை நோக்கி நேற்றுப் பகல் ஸ்ரீலங்காப் படையினர் நடத்திய தாக்குதல்களினால் ஏற்பட்ட சேதங்களை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர்.

தாக்குதல் ஆரம்பமான சில நிமிடங்களில் செஞ்சிலுவை அதிகாரிகள் தமது வாகனத்தில் ஏறி ஆஸ்பத்திரிப் பாதுகாப்பு வலயத்தைச் சுற்றி வந்தனர்.

ஆங்காங்கே படையினரின் சன்னங்களால் ஏற்பட்ட சேதங்களை அவர்கள் பார்வையிட்டனர். ஆஸ்பத்திரி வலயத்தில் விழுந்த சன்னங்களை பொது மக்கள் அவர்களிடம் கையளித்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கொழும்பு அலுவலகத்துக்கு அதன் யாழ். பிரதிநிதிகள் உடன் தகவல் அனுப்பியதாகவும் அறிய வந்தது. [உ-3]

## பரீட்சை மண்டபத்திலும் வேட்டுக்கள் வீழ்ந்தன!

யாழ்ப்பாணம், ஆக. 19

மண்டைதீவிலிருந்து நேற்றுத் தீர்க்கப்பட்ட 50 கலிபர் வேட்டுக்கள் யாழ். நகரில் ஜி சி ஈ. [உயர்தரம்] பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்த பரீட்சை மண்டபத்தையும் விட்டு வைக்கவில்லை.

யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் மேல்மாடியிலிருந்த பரீட்சை மண்டபத்தின் ஒட்டைத் துளைத்துக் கொண்டு விழுந்த வேட்டு ஒன்று அங்கிருந்த கதிரை ஒன்றை உடைத்துச் சேதமாக்கியது.

தெய்வாதீனமாக அந்த இருக்கையில் எந்தப் பரீட்சார்த்திகளும் இருக்காததால் உயிர், உடற் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

இந்தச் சம்பவத்தை அடுத்து பரீட்சை மண்டபம் மேல் மாடியிலிருந்து கீழ்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைப் பணிமனை அருகிலும் வேட்டுக்கள்!

மண்டைதீவிலிருந்து நேற்றுப் பகல் படையினர் தீர்த்த 50 கலிபர் வேட்டுக்கள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகத்திற்கு அருகிலும் வந்து வீழ்ந்தன.

நல்லூர் கோவில் வீதி — நக்கா வீதிச் சந்தியில் உள்ள பணிமனைக்கு அருகிலேயே இச்சன்னங்கள் வீழ்ந்தன.

பணிமனைக்கு அருகில் — நக்கா வீதியில் — அமைந்திருந்த ஒரு வீட்டின் ஓடுகளும் இச்சன்னங்களினால் சேதமுற்றன. [உ-3]

## காரைநகரிலிருந்தும் நேற்று ஷெல் தாக்கு!

மூளாய், ஆக. 19

காரைநகர்ப் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினரும் நேற்று முன்தினம் இரவும், நேற்று நண்பகலும் பொன்னாலை மற்றும் மூளாய் வயல்பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

பொன்னாலைப் பகுதியில் பல ஷெல்கள் விழுந்து வெடித்தன. இந்த ஷெல் வீச்சுகளினால் மக்கள் பெரும் பீதியடைந்தனர். [உ-3]

# மணலாறு காவலரண் மீது நேற்று புலிகள் தாக்குதல்

## ஆயுத தளபாடங்கள் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், ஆக. 19

மணலாறு மாவட்டத்தில் — சிலோன் தியேட்டர் இராணுவ முகாமுக்கு அருகில் — அமைந்துள்ள காவலரண் மீது நேற்றுக் காலை 6. 30 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

சுமார் 5 நிமிடம் நடந்த இந்த தாக்குதலால், காயமடைந்த படையினர் காவலரணை விட்டு ஓடினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த தாக்குதலில் விடுதலைப் புலிகளால் கீழ்க் கண்ட ஆயுத தளபாடங்கள் கைப்பற்றப்பட்டன:

| | | |
|---|---|---|
| ★ 40 மி. மீ. ஷெல்கள் | — | 39 |
| ★ நடுத்தர ரவைகள் | — | 1770 |
| ★ கிரனைமோர் [சிறியது] | — | 2 |
| ★ ஏ. கே. ரவைக் கூடுகள் | — | 7 |
| ★ ஏ. கே. ஹோல்சர்கள் | — | 2 |
| ★ இராணுவ பை | — | 1 |
| ★ தொப்பி | — | 3 |
| ★ சப்பாத்து | — | 2 சோடி |

[உ-3]

## ★ கிழக்குப் படுகொலை:

# ஆணைக்குழு அறிக்கையை அரசு மாற்றி எழுதச் செய்தது!

கொழும்பு, ஆக. 19

அலிஞ்சிப் பொத்தானை, கரப்பொல கிராமங்களில் இடம்பெற்ற படுகொலைகள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் முதல் அறிக்கையை மாற்றி திரும்பவும் மற்றொரு அறிக்கை தயாரிக்கும்படி ஸ்ரீலங்கா அரசு செய்தது.

''ஏசியா வீக்'' பத்திரிகையில் — கொழும்பில் பணி புரியும் அதன் செய்தியாளர் ஜோன் கோமி — எழுதியுள்ள கட்டுரையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'நீண்ட கதை' என்ற தலைப்பில் எழுதப்பட்ட இச் செய்திக் கட்டுரையிலேயே இரு கிராமங்களிலும் இவ்வாண்டு ஏப்ரல் இறுதியில் இடம்பெற்ற படுகொலைகள் பற்றி விவரிக்கப்பட்டிருந்தது.

அக்கட்டுரையில் இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இச்சம்பவங்கள் குறித்து விசாரிக்க மே 7 ஆம் திகதி சுயாதீன விசாரணை ஆணைக்குழு ஒன்றை அரசு நியமித்தது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இரவில் ஹெலி நோட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 19

காரைநகர், பொன்னாலைப் பகுதிகளையும், அளவெட்டி மற்றும் ஏழாலைப் பகுதிகளையும் நேற்றிரவு எட்டு மணியளவில் ஹெலிகொப்டர் ஒன்று வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றது. [உ-13]

## போர் தொடரும் என்கிறார் இராணுவத் தளபதி சிசில்

கொழும்பு, ஆக. 19

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் சில மாற்றங்களுடன் தொடர்ந்து நடைபெறும்;

இவ்வாறு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்தினா இங்கிழமை தெரிவித்ததாக கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டது.

உயிரிழந்த லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ வகுத்த திட்டத்தில் சில மாற்றங்களைச் செய்து, வடபகுதியில் தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று வடபிராந்தியத்தளபதி மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா கூறியிருந்தது தெரிந்ததே.

தமிழினம் காக்கும் வனவளம் காப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் சம்பளப் பிரச்சினை தீர 2 நாள் யுத்தச் செலவு போதுமானது

## அமைச்சர் கூட்டிய மாநாட்டில் தெரிவிப்பு

கொழும்பு, ஆக. 19

அரசாங்கம் வடக்கு—கிழக்கு யுத்தத்துக்கு தினமும் செலவிடும் பணத்தில் இரு நாள் பணத்தை மட்டும் மீதம் செய்தாலேயே ஆசிரியர்களுக்கு விதந்துரைக்கப்பட்ட புதிய சம்பளத் திட்டத்தை அமுல்படுத்த முடியும்.

கல்வி அமைச்சில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் சுதந்திர ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. மெண்டிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற இக் கூட்டத்துக்கு ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

கல்வி ராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. ஏ.ரி. அலஸ் இதனைக் கூட்டி இருந்தார்.

இக் கூட்டத்துக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், ஜாதிக குரு சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், ஜாதிக அத்தியாபனய சேவகர் சங்கம், இலங்கைச் சுதந்திர ஆசிரியர் சங்கம், இலங்கை எக்சத் குரு சங்கம், இலங்கை கல்வி நிர்வாக சேவைச் சங்கம், ஆங்கில ஆசிரியர் சங்கம், அதிபர் சங்கம் ஆகிய சங்கத் தலைவர்கள் சமுகமளித்திருந்தனர்.

கூட்டத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகம் திரு. ரூபசிங்காவும் கலந்து கொண்டார்.

கூட்ட ஆரம்பத்தில் எதிர் வரும் அக்டோபர் 6ஆம் திகதி சர்வதேச சுதந்திர ஆசிரியர் தினக் கொண்டாட்டங்களை எவ்வாறு கொண்டாடுவது என்பது தொடர்பாகக் கலந்துரையாட அமைச்சுச் செயலாளர் முற்பட்டார்.

அப்போது ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் ஏகோபித்த குரலில் சிபார்சு செய்யப்பட்ட சம்பளத்திட்டத்தை அமுல் செய்வது தொடர்பாக அமைச்சு போதிய அக்கறை காட்டவில்லை என்றும், இது தொடர்பாக அரசு இறுதி முடிவெடுத்து அறிவிக்கும் வரை இக்கலந்துரையாடலை ஒத்திவைக்குமாறும் வலியுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில் திரு. மெண்டிஸின் உரையை வழிமொழிந்து பேசிய இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் த. மகாசிவம், அமைச்சின் அதிகாரிகள் இவ்விடயத்தை கல்வி அமைச்சரான ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்து பரிகாரம் காணுமாறு கேட்டுக் கொண்டார்.

ஜூலை மாதம் நடந்த கூட்டத்தில் ஆசிரியர் சங்கத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அமைச்சின் அதிகாரிகள் கவனத்திற்கு எடுத்து நடைமுறைப்படுத்தாமையை அவர் வன்மையாகக் கண்டித்தார்.

மேலும் தாமதமின்றி உடனே ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்து, ஆசிரியர்களுக்கான அர்த்தமுள்ள உண்மையான சம்பளத்திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இக்கோரிக்கைகளை ஏனைய சங்கங்களும் ஏகோபித்து வலியுறுத்தியதை அடுத்து, 'சர்வதேச ஆசிரியர் தினம் தொடர்பாக எந்தவிதமான கலந்துரையாடலும் இடம்பெறாது, கூட்டத்தை ஒத்திவைத்த இராஜாங்க அமைச்சின் செயலாளர், இவ்விடயத்தை கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளர் திரு. எம். டி. டி. பீரிஸ் ஊடாக ஜனாதிபதியின் கவனத்திற்கு சமர்ப்பிப்பதாக உறுதியளித்தார்.

ஆசிரியர்களின் சம்பள மீளாய்வுக்காக நியமிக்கப்பட்ட கல்வி அமைச்சு அதிகாரிகளைக் கொண்ட சம்பள மீளாய்வுக் குழு, சிபார்சு செய்த சம்பளத்திட்டத்தை ஏற்று நடைமுறைப்படுத்துவதென அரசு அறிவிக்கும் வரை, சர்வதேச ஆசிரிய தினம் தொடர்பாக அமைச்சு நடத்தும் அனைத்துக் கூட்டங்களையும் சகல ஆசிரியர் சங்கங்களும் பகிஷ்கரிப்பதென ஏகமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

Practice Makes One Perfect

ஆண்டு - 5
(புலமைப் பரிசில் - 92)

மாதிரிப் பரீட்சை
20-08-92

★ Bond — யாழ்ப்பாணம்
★ Selin— இருபாலை
★ Pearl— நீர்வேலி
★ Kugan — ஆவரங்கால்
★ Satha Pons — வடமராட்சி
★ Brilliant — தென்மராட்சி
★ Vinyls— சுன்னாகம்
★ National — பண்டத்தரிப்பு
★ Bitsmans — மானிப்பாய்
★ Keen — திருநெல்வேலி
★ Osslo— கச்சேரியடி
★ Vinayahar — ஆனைக்கோட்டை
★ Lukky — சண்டிலிப்பாய்
★ Y.M.C.A. — பருத்தித்துறை

விவரங்களுக்கு:

Examination Unit,
BOND INSTITUTES,
யாழ்ப்பாணம்.
[கி-3152]

### உற்சவங்கள்

சாவகச்சேரி, ஆக. 19

தென் மட்டுவில் வேரக்கேணி கந்தசுவாமி கோயிலில் இன்று மகாசங்காபிஷேகம் நடைபெறும். (உ-31)

★ ★ ★

அராலி, ஆக. 19

அராலி மேற்கு நொச்சியம்பதி பிள்ளையார் தேவஸ்தானத்தின் வருடாந்த உற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. (உ-12)

### இன்று

யாழ்ப்பாணம், ஆக. 19

வட்டூர் இந்து இளைஞர் கலாசார மன்றத்தின் பரமானந்த சிவம் ஞாபகார்த்த நூல் நிலைய 13 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு. மன்ற வளாகத்தில் ஆரம்பமாகும்.

திரு. சிவலிங்கரூபன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், நல்லை ஆதீன முதல்வர் கலந்து கொண்டு ஆசியுரை வழங்குவார். விழாவில் பலர் உரையாற்றவுள்ளனர். இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஒ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, ஆக. 19

வேலணைக் கோட்ட அதிபர்கள் சகலரின் சேவைக்கால ஆலோசகர்கள் கூட்டம் ஒன்று இன்று புதன்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ் சென். ஜோன்ஸ் அக்கடமியில் நடைபெறும். (உ-30)

### கோஷ்டி மோதல்

சங்கத்தானை, ஆக. 19

தென்மராட்சி கெற்பலி அகதிமுகாமில் சில தினங்களுக்கு முன்னர் கோஷ்டி மோதல் இடம்பெற்றதாக அறியவருகிறது.

இரு பெண்களுக்கு இடையில் ஏற்பட்ட பிணக்கு கோஷ்டி மோதலாக வெடித்தது என்றும் —

அதனால் ஐந்து பேர் வரை காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-140)

### இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 19

மல்லாகம் ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் கொக்குவில் இந்து மைதானத்தில் நடத்தும் 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ திருமலை வெள்ளை அணி எதிர் அம்பாள் 'பி' அணி

★ மோகனதாஸ் அணி எதிர் கொய்யாத்தோட்டம் அணி [த]

★ ★ ★

குருநகர், ஆக. 19

யாழ் - மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையம் நடத்தும் அமரர் சி. பஞ்சலிங்கம் நினைவு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கும் ஆட்டங்கள் வருமாறு:-

★ பொற்பதி எதிர் சென் மேரிஸ்

★ பாடும்மீன் எதிர் வைக்கிங்ஸ் [உ-51]

### பரீட்சை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனத்துக்கு மாற்றப்பட்டது.

வேட்டினால் அருகிலிருந்த கதிரை உடைந்ததைக் கண்ட [illegible] வர்களாகக் காணப்பட்டனர். [உ-51]

# அராலி கண்ணிவெடிக்கு விடுதலை புலிகளே காரணம்

## ஈ. பி. டி. பி. தலைவர் கூறுகிறார்

மணிலா, ஆக. 19

அராலித்துறையில் ஸ்ரீலங்கா இராணுவத் தளபதிகள் உயிரிழக்கக் காரணமான கண்ணி வெடித் தாக்குதலை விடுதலைப் புலிகளே நடத்தினர் என்று தாம் நம்புவதாக ஈ. பி. டி. பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருக்கிறார்.

இக்கண்ணி வெடிச் சம்பவத்திற்கும் தமது அமைப்பிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இறுதிக் கட்டத் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்காக டென்ஸில் கொப்பே

[6 ஆம் பக்கம் பார்க்க]

# 49 டாக்டர்களுக்கு வடக்கில் பற்றாக்குறை

## ஆனால் ஒருவர் மட்டுமே வர விருப்பம்

யாழ்ப்பாணம், ஆக. 19

வடக்கில் உள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் தற்போது 49 டாக்டர்களுக்கு வெற்றிடங்கள் இருந்து வருகின்றன. ஆனால் வடக்கே கடமையாற்றுவதற்கு ஒரு டாக்டர் மட்டுமே விருப்பம் தெரிவித்துள்ளார். ஏனையோர் வடக்கே கடமை ஆற்ற வரபின் நிற்கிறார்கள்.

கடந்த 29 ஆம் திகதி அத்தியாவசிய சேவையாளர் நாயகத்தால் நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

வடக்கே நிலவும் டாக்டர் பற்றாக்குறை பற்றி விவாதிக்கப்பட்டபோதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது என்று கூறப்படுகிறது. [இ-162]

# ஆஸி. கிரிக்கெட் டெஸ்ட்: இலங்கை முன்னணி!

ஆஸ்திரேலிய — இலங்கை அணிகளுக்கிடையில் கொழும்பு என். சி. சி. மைதானத்தில் நடைபெறும் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று இலங்கை அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 265 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் முன்னணி வகித்தது.

இலங்கை அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்கா ஆட்டமிழக்காமல் 69 ஓட்டங்களையும், அசங்க குருசிங்க ஆட்டமிழக்காமல் 87 ஓட்டங்களையும் பெற்றனர். ரோஷன் மகாநாம 78 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

பந்து வீச்சில் மார்க் வோ 51 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், கிரெய்க் மத்யூஸ் 51 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

முன்னதாக ஆஸ்திரேலிய அணி தனது முதல் இன்னிங்ஸில் 256 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது என்பது தெரிந்ததே. [உ-த]

# குடிசை தீப்பற்றி எரிந்ததால் குழந்தை கருகி மாண்டது!

## புலோலி மேற்கில் சம்பவம்

குடிசை தீப்பற்றி எரிந்ததில் குடிசைக்குள் நித்திரையாக இருந்த 4 வயது ஆண் குழந்தை தீயில் எரிந்து கருகி மரணமானது.

புலோலி மேற்கு வத்தனை என்ற இடத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஹரிபால் என்ற குழந்தையே பரிதாபமாக உயிரிழந்தது.

இரட்டைக் குழந்தைகளில் ஒன்றான ஹரிபால் நித்திரை செய்து கொண்டிருக்கையில் தாயார் சமைப்பதற்காக அடுப்பில் நெருப்பை மூட்டி விட்டு தண்ணீர் எடுக்கச் சென்றதாகவும் —

அடுப்பு வேகமாக எரிந்து குடிசையில் தீ பிடித்துக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தாயார் திரும்பிவரும் போது குடிசை முற்றாக எரிந்து, மற்றைய குடிசையிலும் தீப்பற்றிக் கொண்டிருப்பதைக் கண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இரட்டைக் குழந்தைகளில் மற்றையது குடிசைக்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்ததால் உயிர் தப்பியது என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-15]

### கும்பகோணத்தில் உள்ள

# ரி.வி. நிலையத்திற்கு மீண்டும் குண்டு வைக்கத் திட்டம்?

## எச்சரித்து மிரட்டல் கடிதம்

சென்னை, ஆக. 19

சென்னை கும்பகோணம் தொலைக் காட்சி நிலையம் மீண்டும் ஒரு வெடிகுண்டுத் தாக்குதலுக்கு இலக்காகும்.

—இவ்வாறு தெரிவிக்கும் மிரட்டல் கடிதம் தொலைக் காட்சி அஞ்சல் நிலைய உதவிப் பொறியிளாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தொலைக் காட்சி நிலையத்தில் குண்டு வெடிக்கும் என்றும்—

இதை சாதாரணமாக நினைக்க வேண்டாம் என்றும் அக்கடிதத்தில் எச்சரிக்கப்பட்டிருந்ததாம்.

கடந்த ஜூன் மாதம் இந்த தொலைக் காட்சி நிலையத்தில் குண்டு ஒன்று வெடித்ததும்—

குண்டு வெடித்த இடத்துக்கு அருகே விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும், ராஜீவ் கொலைச் சந்தேக நபரான தானுவைப் பாராட்டியும் எழுதப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் காணப்பட்டது தெரிந்ததே.

மிரட்டல் கடிதத்தைத் தொடர்ந்து தொலைக் காட்சி நிலையத்தின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும்—

பொதுமக்கள் மதியில் பதற்றம் நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [உ-த]

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளை, தலைமையகம்

வலி. வடக்குப் பிரிவு
இடைக்கால நிர்வாக நியமனம்

19-08-92 புதன்கிழமை தொடக்கம் 30-08-92 ஞாயிற்றுக்கிழமை வரை வலி. வடக்குப் பிரிவுக்கு புதிய இடைக்கால நிர்வாகம் யாழ். கிளை இடைக்கால நிர்வாகத்தால் நியமிக்கப்பட்டுள்ளது என்பதையும், இவர்களே வலி. வடக்குப் பிரிவு கடமைகளையும் தேர்தல் சம்பந்தமான விடயங்களையும் கவனித்து வருவார்கள் என்பதை இத்தால் அறியத்தருகிறோம்.

செஞ்சிலுவைச் சங்கச் சேவையில்,
இடைக்கால நிர்வாகம்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
18-8-92
(இ/30[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டில் இருந்து

# திரும்பிவரும் அகதிகளுக்கு வவுனியாவில் முகாம்கள்

கொழும்பு, ஆக. 19

தமிழகத்தில் இருந்து விமானம் மற்றும் கப்பல் மூலம் சுய விருப்பத்தின் பேரில் நாடு திரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகளில் பெரும்பாலோர் வவுனியாவில் புதிதாக அமைக்கப்படவுள்ள அகதி முகாம்களில் தங்க வைத்து பராமரிக்கப்படவுள்ளனர்.

இம்முகாம்களை அமைப்பதற்காக மூன்று இடங்களை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் தெரிவுசெய்து உள்ளது.

இந்த அகதிகளைப் பராமரிக்கும் பொறுப்பையும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் ஏற்கவிருக்கிறது.

தாண்டிக்குளம், நெளுக்குளம், மரக்காரம்பளை ஆகிய இடங்களிலேயே இம்முகாம்கள் அமைக்கப்படும்.

அண்மையில் வவுனியா சென்றிருந்த ஐ.நா. தூதரக அதிகாரி பீற்றர் நிக்கலஸ், வவுனியா அரச அதிபர் தில்லை நடராசா ஆகியோர் இவ்விடங்களுக்குச் சென்று முகாம்கள் அமைக்கப்படவுள்ள இடங்களைப் பார்வையிட்டனர். [ஒ-எ]

## 175 இளைஞர், யுவதிகளுக்கு முதலுதவி, தையற் பயிற்சிகள்

### தென்மராட்சியில் செஞ்சிலுவை ஏற்பாடு

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த மீசாலை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் இளைஞர், யுவதிகளுக்கான முதலுதவி மற்றும் இலவச தையற்பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

175க்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் பங்குபற்றும் மேற்படி பயிற்சி வகுப்புகள் அண்மையில் மீசாலை கிழக்கு முருகன் சனசமூக நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. [ஒ]

வடக்கு-கிழக்கு இணைப்பு:

## முஸ்லிம் காங்கிரஸின் யோசனை நடைமுறைக்கு சாத்தியம் இல்லை

### தமிழ்க் கட்சிகள் தெரிவிப்பு

"வடக்கு — கிழக்கு இணைப்புக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்துள்ள யோசனை நடைமுறையில் சாத்தியமானது அல்ல".

இவ்வாறு தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர் என்று கொழும்புத் தமிழ்ப் பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் யோசனைகள் நிர்வாகப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர் என அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-எ]

## அமெரிக்கப் போர் விமானம் ஈராக் எல்லையில் துகள்!

### விபத்தா என ஆராயப்படுகிறது

கூலைத் படைகளுடன் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க போர் விமானம் ஒன்று நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) ஈராக் எல்லைப்பகுதியில் வீழ்ந்து நொறுங்கித் துகள் துகளானது.

இந்தச் சம்பவத்தில் அந்த விமானத்தின் விமானியும் கொல்லப்பட்டு விட்டார்.

விமானம் வீழ்ந்ததற்கான காரணம் ஆராயப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் இடம்பெற்ற அதே இடத்தில் கடந்த ஞாயிறன்று அமெரிக்க கடற்படையின் ஹெலிக்கொப்டர் ஒன்றும் வீழ்ந்து நொறுங்கியதுஎன்றும்— அதில் பயணம் செய்த கடற்படை வீரர்கள் இருவரும் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில்—

ஈராக்கிற்கு எதிராக அமெரிக்கா இராணுவ தாக்குதல்களை நடத்தத் தயாராகி வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஐ.நா.சபையின்ஆதரவுடன் ஈராக் மீது விமானத்தாக்குதல் நடத்தும் பட்சத்தில் குண்டு வீசுவதற்குத் தயாராக பிரிட்டிஷ் விமானப் படை விமானங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக பிரிட்டிஷ் உத்தியோக பூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [ஒ-10]

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஆக. 19

பிள்ளைக்கவி வ. சிவராசசிங்கத்தின் உரையுடன் கூடிய "கந்தபுராணம் — சூரபன்மன் வதைப் படலம்" நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும். [ஒ-5]

## முகாம்களில் சுகாதார வசதி பேண முயற்சி

வலி - வடக்கில் உள்ள அகதி முகாம்களுக்கான அடிப்படை சுகாதார வசதிகளை பேணுவதில் சுகாதார அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

வாரம் இரு தடவைகள் இவர்கள் முகாம்களுக்கு விஜயம் செய்கின்றனர்.

வலி - வடக்கில் அளவெட்டியில் எட்டு முகாம்களும், தெல்லிப்பழையில் நான்கு முகாம்களும், மல்லாகத்தில் நான்கு முகாம்களும், சுன்னாகத்தில் ஆறு முகாம்களும், இணுவிலில் ஆறு முகாம்களும், உடுவிலில் ஆறு முகாம்களும் உள்ளன. [இ-68]

## ஆங்கில பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஆக. 19

யாழ். மாநகர சபை ஊழியர்களுக்கான ஆங்கிலப் பயிற்சி வகுப்பு ஒன்றை, யாழ் மாநகர சபை ஆணையாளர் ஏற்பாடு செய்துள்ளார்.

இப் பயிற்சி வகுப்புகள் நல்லூர் நூலக மண்டபத்தில் நடைபெற்று வருகின்றன.

பாதிக்கப்பட்டுள்ள

## மேசன் குடும்பங்களுக்கு உலர் உணவு விநியோகம்

இரண்டு வருடங்களுக்கு மேலாக பாதிக்கப்பட்டுள்ள மேசன்மார் குடும்பங்களுக்கும் மேசன் தொழிலாளர் குடும்பங்களுக்கும் இலவச உலர் உணவு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமான பணிப்புரையை சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் யாழ். அரச அதிபர் வழங்கியுள்ளார். [ஓ-12]

மயிலந்தனை சம்பவம்:

## கொலையுண்ட தமிழரின் பெயர்ப்பட்டியல் கையளிப்பு

மட்டக்களப்பு மாவட்டம்- மயிலந்தனையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ்ப்பொதுமக்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் ஜனாதிபதி செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அத் தாக்குதல் சம்பவத்தில் படுகாயமடைந்து, கொழும்பு கண்டி மற்றும் பொலன்னறுவை ஆஸ்பத்திரிகளில் சிகிச்சைபெற்று வரும் தமிழ் பொதுமக்களின் பெயர்களும் அப்பட்டியலில் இடம் பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. [த-எ]

## தரமான பாடல்களை இங்கும் உருவாக்க முடியும்

### வெளியீட்டு விழாவில் இளங்குமரன்

வண்ணார்பண்ணை, ஆக. 19

தரமான பாடல்களை தமிழீழத்திலும் உருவாக்க முடியும் என்பதை "கூவு குயிலே" ஒலிப்பதிவு நாடா மூலம் இங்குள்ள கலைஞர்கள் உலகுக்கு உணர்த்தியுள்ளனர். போராட்டம் தொடர்பான கருத்துக்கள் மக்களைச் சென்றடைய இது போன்ற வெளியீடுகள் உதவுகின்றன.

நிதர்சனம் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட 'கூவு குயிலே' ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு வைபவத்தில் கலந்து கொண்டு, வெளியீட்டுரை நிகழ்த்தும் போது, விடுதலைப் புலிகள் அமைப்பின் மூத்த உறுப்பினர் திரு. இளங்குமரன் இவ்வாறு சொன்னார்.

நிதர்சனம் நிறுவனப் பொறுப்பாளர் திரு. பரதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் அவர் மேலும் கூறியதாவது:

முன்னர் சினிமாப் பாடல்களைக் கேட்பவர்கள் இப்போது சுய உணர்வு பெற்று தாயக விடுதலைப் பாடல்களைக் கேட்பதில் ஆர்வம் காட்டுகின்றனர் என்றார்.

'கூவு குயிலே' ஒளிப்பதிவு நாடாவை திரு. இளங்குமரன் வெளியிட்டு வைக்க, பண்டிதர் பரந்தாமன் அதனைப் பெற்றுக் கொண்டார். விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு யோகரட்ணம் யோகி, கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை ஆகியோர் மதிப்பீட்டுரை நிகழ்த்தினர்.

இறுதியில் 'கூவு குயிலே' ஒலிப்பதிவு நாடாவின் பாடல்கள் கலைஞர்களால் இசைக்கப்பட்டன. [த-162]

## மாடு திருடியவர் பிடிபட்டார்

அளவெட்டி, ஆக. 19

அளவெட்டி மேற்கில் பால் மாடு ஒன்றைத் திருடி இறைச்சிக்கு விற்ற ஒருவர் பிடிபட்டு காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் அண்மையில் இடம் பெற்றது. மாட்டைத் திருடியவர் விசையாழ். பொம்மை வெளிக்கு கொண்டு வந்து விற்க முயன்ற போது பிடிபட்டார். [இ-15-13]

உ

★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் ஆங்கிரச வருடம் ஆவணித் திங்கள் 04 ஆம் நாள் (1992 - 08 - 20) வியாழக்கிழமை நண்பகல் 12 30 மணி முதல் 2-00 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில்,

எமது ஏக புதல்வன் செல்வன் ஸ்ரீஸ்கந்தராசா (இராஜன்) அவர்களுக்கும்

இணுவில் கிழக்கு திருமதி ச. கணபதிப்பிள்ளையின் கனிஷ்ட புதல்வி செல்வி சுகந்தமலர் அவர்களுக்கும்

லண்டன் பிள்ளையார் ஆலயத்தில் மங்கல நாண்பூட்டு விழா நடைபெறும். அன்றைய தினம் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் உறவினர்களும், நண்பர்களும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ தங்கள் நல்வரவை விரும்பும் ★

திரு. வை. தேவபாலன்,
திருமதி தே. மகேஸ்வரி,
24, Rectory Lane,
London - S. W. 17 9PZ,
U. K.

செ. சோதிப் பெருமாள் ஜே. பீ.
(இளைப்பாறிய கொத்தணிபிரதி அதிபர்- இணுவில்),
திரு. திருமதி மீ. சதானந்தன் (வவா),
செல்வி சோ. சந்திரலேகா (சாந்தி)
[இ-8068]

புத்தூக்கி
(REFRESHER)

★ மென்பானம் புதிய சுவை,
★ சர்வதேச தரத்திற்கு நிகரானது
★ தர ஆய்வின் பின் -
உங்கள் கரங்களை வந்தடைகின்றன,

சற்று சீர்தூக்கிப் பாருங்கள்
புத்தூக்கியின் ஒவ்வொரு துளியும்
இனிமை நிறைந்த தேன்துளி......!
தமிழீழத்தில் முதற் தடவையாக காற்றூட்டப்பட்டு அறிமுகப்படுத்தப்படுகின்றது!
இவ் இளவேனிற் காலத்தில் துடிப்புடன் பருகுங்கள்!!

புத்தூக்கி மென்பானம்
தித்திக்கும் பத்து சுவைகளில் கிடைக்கின்றது
அருகில் உள்ள கடைகளில்
புத்தூக்கி
பெயர் சொல்லி கேட்டு வாங்குங்கள்
புத்தூக்கி
தமிழீழ தேசிய தயாரிப்புகள் வாங்கி பலனடைவீர்.

ஏக விநியோகஸ்தர்:
இனிமை
மென்பான விநியோகஸ்தர்,
54A, புங்கன்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

[22171]
[விளம்பர அமைப்பு; செனித் ஜோ. எக்......]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மில் விற்பனைக்கு

புதிய வைன்ர அலர், No 7 அலர், 12'' இறைண்டர் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க. சபாநாதன், அரசடி வீதி, கரவெட்டி. (5256)

## பைசிக்கிள் விற்பனைக்கு

லுமாலா மாணவர் சைக்கிள் 18 அங்குலம், மிகநல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. க. முத்துக்குமாரசாமி, பாரதி பதிப்பகம் (A. B. Printers) 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (22207)

## கரும்பு விற்பனைக்கு

நன்றாக முற்றிய நல்ல இனச் செங்கரும்பு, விற்பனைக்கு இருக்கிறது. வை. பேரம்பலம் தலையாளி, கொக்குவில். (5260)

## புலமைப்பரிசில் பரீட்சை

எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் ஆண்டு - 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்களும், அரசாங்கம் நடத்திய இறுதிப் பரீட்சை வினாத்தாள்களும் விடைகளுடன் விற்பனையாகின்றன. Bond Book Stall, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (5237)

## இலவச திருமண சேவை

28 வயது, உத்தரம், செவ்வாய் 8, நிரந்தர (முதலீடு) வியாபாரிக்கு ஏற்ற மணமகள் தேவை. எமது சேவை ஞாயிறு காலையில் உண்டு. து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (5258)

## மணப்பெண் தேவை

சைவ பேரசன, அரசாங்கத்திலிருந்து விலகி தனியார் துறையில் பணியாற்றுபவருக்கு கல்வியறிவும், பண்பும் உள்ள 40 - 50 வயதுக்கிடைப்பட்ட பெண் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (22220)

## சஞ்சிகை

ஞானதீபம் சஞ்சிகை, பிரம்மஞானி கந்தையா சுவாமிகள் (குடைச்சாமி) வரலாறு, பகவான் சத்திய சாயிபாபா திரு அவதாரமும் அற்புதங்களும், 04-09-92 இல் வியாழ மாற்றம். 12 இராசிகளுக்கும் பலன்கள் ஆசிரியர் ஞானகுரு, மூவர்ண முகப்பு கவர், எங்கும் விற்பனையாகிறது. (22216)

## வினா - விடைகள்

அஸ்ரன் வெளியீடு: கடந்த கால வினாக்களும் விடைகளும். 4 வருடங்கள் விவரங்களுக்கு: ஸ்ரீகாந்தா புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (22211)

## ஒத்துமாறல்

கல்வியாண்டு 1989 இல் கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு பௌதிக விஞ்ஞான பட்டப்படிப்பிற்காக தெரிவாகி கல்வியை 1990இல் தொடர இருக்கும் மாணவி வேறு பல்கலைக்கழகத்திற்கு ஒத்து மாற விரும்புகிறார். ஒத்து மாற விரும்புவோர் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சி. சண்முகம், "ஆனந்தப்வனம்", கரணவாய் தெற்கு, கரவெட்டி. (22208)

## மணமகன் தேவை

Non R. C; 31 வயது, அழகிய ஆசிரியைக்கு பெற்றோர் பண்பான ஆசிரியர், வங்கி, பட்டதாரி, எக்கவுண்டன், என்ஜினியர் மணமகனைத் தேடுகின்றனர். உள்நாடு, வெளிநாடு விரும்பத்தக்கது. மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம். (22218)

## தேவை

சமூக சேவையில் நாட்டமுள்ள, தங்கிப் பணி புரியக் கூடிய உதவி மேற்பார்வையாளர் தேவை. 45 வயதுக்கு மேற்பட்ட உடல் நலமுடைய ஆண்/பெண் இருபாலாரும் 15-09-92க்கு முன் விண்ணப்பிக்கவும். இருப்பிட, உணவு வசதிகளுடன் ஊக்குவிப்பு வேதனம் பேசித் தீர்க்கப்படும். இல. 856, மே/பா உதயன். (5259)

## ஆங்கில ஆசிரியர்

ஆங்கில ஆசிரியர் பதவிக்கான வர்த்தமானியும் விண்ணப்பப் படிவமும் பார்வைக்கு உண்டு. பாரதி பதிப்பகம் (A. B. Printers) 430, K. K. S வீதி, யாழ்ப்பாணம். (22222)

## மணப்பெண்கள் தேவை

கனடாவிலிருந்து வந்து இங்கு திருமணம் செய்து கூட்டிச் செல்லும் 36, 34, 32 வயது கத்தோலிக்க மணமக்களுக்குத் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (22219)

## O/L மாணவர்களுக்கு

O/L மாணவர்களுக்கான 6 வருட கடந்த கால ஆங்கில வினாத்தாள்கள் தமிழ் மொழி பெயர்ப்புடன் விற்பனையாகின்றன. ஆக்கம்: M.K தில்லைமோகன் (20/-), பூபால சிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (கி-3137)

## நூல்களுக்கு நிதி

சாவகச்சேரி பிரதேசசபையின் கீழ் உள்ள மறவன்புலோ, மந்துவில் மேற்கு, எழுதுமட்டுவாள், நாவற்குழி நூலகக் கிளைகளுக்கான புத்தகங்களை வாங்குவதற்கு பிரதேச சபை தலா பத்தாயிரம் ரூபாவை ஒதுக்கி உள்ளது.

---

அகில இலங்கை காந்திசேவா சங்கம்

## வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 30 - 08 - 92 ஞாயிறு காலை 10-00 மணிக்கு உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு அதிகபட்சமான சேவைகளை வழங்குவதற்கான வழிவகைகளை காணவேண்டி உள்ளமையால் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்பாக அழைக்கிறோம். தனிப்பட்ட அழைப்புகள் அனுப்பப்படவில்லை.

நன்றி:

செயலாளர்,
அகில இலங்கை காந்திசேவா சங்கம்.

காந்தி நிலையம்,
உருத்திரபுரம்,
கிளிநொச்சி. (22217)

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L**

DAY CLASSES (8-00—2-00)
EVENING CLASSES (3-00—6-00)
Sat.&Sun. CLASSES (8-00—2-00)

வகுப்புகளுக்கான

## PAPER CLASS

எமது வழமையான திறமைமிக்க யாழ். முன்னணி ஆசிரியர்குழு

ஆரம்பம்: 20 - 08 1992

★ பாட அலகு ரீதியாக வினாத்தாள் வழங்கப்பட்டு மீட்டல் செய்யப்படும்.

(கி/3133)

---

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்

## வயிரமுத்து பொன்னுத்துரை

(உரிமையாளர் லங்கா ருவஸ்)

பொன்னர் வளவு, தொல்புரம் மேற்கு வயிரமுத்து பொன்னுத்துரை அவர்களின் 45ஆம் நாள் நினைவஞ்சலி கொழும்பில் இன்று நடை பெறும்.

அன்னார் சுகயீனமாக இருந்த நாட்களில் ஆறுதல் கூறி உறுதுணையாக இருந்த உற்றார், உறவினர், நண்பர்கள், ஊரவர்கள் மற்றும் யாவருக்கும், விசேடமாக மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை வைத்தியர்கள், ஊழியர்களுக்கும், மரண வைபவத்தில் கலந்து உதவிய சகலருக்கும், அன்னாரின் இல்லத்தில் நடைபெற்ற அந்தியேட்டி வைபவத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'பொன்னர் வளவு',
தொல்புரம் மேற்கு,
சுழிபுரம். (கி-3067)

---

## வலி - வடக்கு குடியிருப்புகள் மீது

# ஷெல் தாக்குதலை நிறுத்த நடவடிக்கை எடுக்குக!

## இடம்பெயர்ந்தோர் அமைப்பு தீர்மானம்

தெல்லிப்பழை, ஆக. 19

வலி-வடக்குக் குடியிருப்புப் பகுதிகள் மீது ஸ்ரீலங்காப் படையினர் இரவு நேரங்களில் நடத்தும் ஷெல் தாக்குதல்களை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோருவதென முடிவாகியுள்ளது.

வலி-வடக்கு இடம்பெயர்ந்தோர் அமைப்புக் குழுக் கூட்டம் கடந்த ஞாயிறன்று கூடி, மேற்படி தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியது.

அரசாங்க அதிபர், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதி ஆகியோரை சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க உதவும்படி கேட்பதென அந்த தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

ஏழாலைப் பகுதியில் ஷெல் தாக்குதலால் அண்மையில் பொதுமக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்தும் அந்தத் தீர்மானத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

திரு. எஸ். கந்தசாமி தலைமையில் நடந்த கூட்டத்தில் மற்றும் பல தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. (ஒ-68)

---

## மொடேண் எடியுக்கேசன் சென்ரர்

கரவெட்டி

துரித மீட்டல் வினா-விடை வகுப்புக்கள்

★ இரசாயனம் ★ தாவரவியல்
★ பௌதிகம் ★ விலங்கியல்
★ கணிதம்

ஆரம்பம்:
**20 - 08 - 1992**

(22206)

---

## புதிய தொழில் பயிற்சி நெறிகள்

**Computer - Basic**
and
**Radio, T. V. & Deck**

ஆரம்பம்: 22 — 08 — 1992

★ சிறந்த விரிவுரைகள்
★ விசேட செய்முறைகள்
★ இலகு விளக்கங்கள்
★ துரித பயிற்சிகள்

விவரங்களுக்கு:

**North Ceylon Technical Institute,**
14, St. Peter's Lane,
Hospital Road, Jaffna.

(கி-3151)

---

## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
12
05
1916

மறைவு:
14
09
1976



திருமதி

## இரத்தினாம்பிகை நல்லையா

(195, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்)

திதி: 19-08-1992

ஆண்டுகள் பதினாறு ஓடி மறைந்தாலும், உங்கள் நினைவுகள் என்றும் எங்கள் உள்ளங்களில் இருந்து நீங்காது. உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

07, கைலாச பிள்ளையார் -
கோவில் பின் வீதி,
நல்லூர். (22213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மூன்றாவது கணை!

தமிழ்ப் பிரதேசங்கள் இப்போது யுத்தப் பிரதேசங்களாக மட்டுமன்றி நோய்ப் பிரதேசங்களாகவும் மாறிவிட்டன. உயிராபத்தான தொற்று நோய்கள் என்று பெரிதாகப் புலப்படாத போதிலும் மிகப் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பாதிக்கப்பட்டதாக வெளியில் தெரியாத போதிலும், நோய் அபாயம் சமூகத்தை ஊடறுத்துள்ளது.

உதாரணமாக யாழ்ப்பாணத்தில் இப்போது பலவகையான நோய்த் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

சிறு குழந்தைகளைப் பொறுத்தமட்டில் போசாக்கின்மை, சிசு மரணங்கள் அதிகரிப்பு என்பனவும்—

இளம் வயதினரைப் பொறுத்தமட்டில் வாதக் காய்ச்சல், மூளைக் காய்ச்சல், போலியோ என்பனவும்—

வயதானவர்களுக்குத் தொழு நோய், எய்ட்ஸ், புற்றுநோய், இருதயநோய், குடல்நோய் மற்றும் உளவியல் பலவீனம்—ஆகியனவும் அதிக பாதிப்பை ஏற்படுத்துவதாகச் செய்திகள் வந்த வண்ணமிருக்கின்றன.

யுத்த காலம் அல்லாத சாதாரண காலங்களிலும் மக்களை நோய்கள் பாதிக்கவே செய்தன. ஆனால் அந்தக் காலங்களையும் கடந்த இரண்டேகால் வருடங்களையும் ஒருசேரப் பார்க்கும்போது வித்தியாசம் துலக்கமாகத் தெரிகிறது.

போர்ச் சூழ்நிலையில் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையால் போதிய உணவுப் பொருள்கள் கிடையாமை, தொழில்வசதி இல்லாமை, உறவினர் — உடைமைகள் இழப்பினாலும், குடும்பங்கள் பிரியுண்டதாலும் ஏற்படும் உளவியல் தாக்கம் என்பன நோய்ப் பாதிப்புக்கு மூலகாரணிகள் ஆகின்றன.

மக்கள் செறிந்து வாழும் குறுகிய நிலப்பரப்பில் வெடிமருந்துப் பொருள்களின் நச்சுத் தன்மை கலந்து நிலம், நீர், காற்று ஆகியவை மாசுபடுவதும் நோய்த் தாக்கத்துக்கு முக்கிய காரணியாகும்.

மக்கள் தங்கள் சொந்த வீடுகளில் வாழமுடியாமல் அகதி முகாம்களிலும், பிறர் வீடுகளிலும் வாழ்வதனால் உண்டாகும் சுகாதாரக் கேட்டினால் மட்டுமன்றி உளப் பாதிப்பினாலும் அவர்கள் நோயாளிகளாகிறார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக போதிய வைத்திய வசதிகள் இல்லாமை, மருந்துப் பற்றாக்குறை என்பனவும் மக்கள் நோயாளிகளாவதற்குப் பிரதான காரணமாகும். கிடைக்கும் வசதிகளைத் தக்கபடி பயன்படுத்தாமையும் ஒரு காரணமாகும். தனி நபர் சுகாதாரம் பேணுதல், பொதுச் சுகாதாரம் பேணுதல் ஆகியவற்றிலும் எமது மக்கள் (எவ்வளவு படித்தாலும்) போதிய கவனம் செலுத்துவதில்லை.

போர்க்காலச் சூழ்நிலையிலும், கிடைக்கும் வசதிகளை தக்கபடி பயன்படுத்தி நோயாளிகளாக மாறாமல் ஆரோக்கியமானவர்களாக வாழ்வதற்கு பழக வேண்டும்.

போராட்டத்தின் மத்தியில் வாழ்வதற்கு சுகநலம் அவசியம். அதனைப் பாதிக்கச் செய்வதற்கு அரசு தன்னாலான வரை முயலும். அரசு தமிழருக்கு எதிராகத் தொடுக்கும் முதலாவது கணை, இராணுவ நடவடிக்கை. பொருளாதாரத் தடை இரண்டாவது என்றால், சுகாதாரக் கேட்டை உண்டாக்குவது — மக்களை நோயாளிகளாக்குவது — மூன்றாவது கணை. அந்தக் கணை எம்மைத் தாக்காது தப்பிக் கொள்ள எமது வளங்களையும்' கிடைக்கும் வசதிகளையும் தக்கபடி பயன்படுத்துவது அவசியமாகும்.

# கேட்ட அளவு ம.எண்ணெய் தர கூட்டுப்படை மறுப்பு!

யாழ்ப்பாணம், ஆக. 19

யாழ்ப்பாண மாவட்டத் தேவைக்கெனக் கேட்கப்பட்ட அளவு மண்எண்ணெய் முழுவதையும் வழங்க முடியாது என்று கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

எனினும் இதுவரை அனுப்பப்பட்டதை விடச் சற்று கூடுதலாக வழங்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இது சம்பந்தமாக கூட்டுப்படைத் தலைமையகத்தில் இருந்து தமக்கு அறிவித்தல் வந்திருப்பதாக யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் தலைமையில் கடந்த 13ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த முடிவு செய்யப்பட்டது.

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான அளவு மண்எண்ணெயை கூட்டுப் படைத் தலைமையகம் கணக்கிட்டுள்ளதாகவும்—

அந்த அளவுக்குரிய கூடுதல் மண்எண்ணெய் மட்டுமே குமண கப்பலில் அனுப்பி வைக்கப்படும் எனவும் இக் கூட்டத்தின் பின் யாழ். அரச அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச அதிபரால் கோரப்பட்ட முழுத் தொகையையும் அனுப்புவது தற்போதைய நிலையில் சாத்தியப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத் தேவையைப் பூர்த்தி செய்ய ஆயிரம் பரல்கள் மண்எண்ணெயை அனுப்பி வைக்குமாறு அரசாங்க அதிபர் கோரி இருந்தது தெரிந்ததே.

இந்த கோரிக்கை விடுக்கப்பட்ட பின்னர் இரண்டு தடவைகளில் மொத்தம் 120 பரல்கள் மண்எண்ணெய்யே அனுப்பப்பட்டிருந்தது.

இது தொடர்பாக யாழ். அரச அதிபர் கூட்டுப்படைத் தலைமையகத்துடன் மீண்டும் தொடர்பு கொண்டு முறையிட்டதை அடுத்தே கூடுதல் மண்எண்ணெய் அனுப்ப தற்போது முடிவாகி உள்ளது, [இ-162]

## முஸ்லிம்களின் உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும்

### இப்படிக் கூறுகிறார் அஷ்ரப்

கொழும்பு, ஆக. 19

முஸ்லிம்களின் உரிமைகளைத் தாராள மனதுடன் தமிழ்க்கட்சிகள் அங்கீகரிக்க வேண்டும். இந்த அங்கீகாரம் பின் தள்ளப்படுவதால் தான் தமிழர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வும் பின் தள்ளப்படுகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் முன்கண்டவாறு தெரிவித்தார் என்று நேற்றைய கொழும்புப் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகி உள்ளது. [ஒ-எ]

## கீதோபதேசம் கைநூல்

குருநகர், ஆக. 19

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான தேர்த்திருவிழா தினமான எதிர்வரும் வெள்ளிக்கிழமை கீதோபதேசம் என்னும் கைநூல் வெளியிட்டு வைக்கப்படும்.

அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவரின் கைவண்ணத்தில் இந்நூல் உருவாகி இருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-51)

## ஆயிரம் பேருக்கு மேல் விசா இன்றி தங்கியுள்ளனராம்!

கொழும்பு, ஆக. 19

விசா இல்லாமல் ஆயிரத்துக்கு மேற்பட்ட வெளிநாட்டவர்கள் இலங்கையில் தங்கியிருப்பதாக பொலீஸாருக்கும், குடிவரவு, குடியகல்வு திணைக்களத்துக்கும் கிடைக்கும் தகவல்களிலிருந்து தெரிய வந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இவ்வாறு சட்ட விரோதமாக இங்கு தங்கி உள்ளவர்களுள் முன்னணி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளோர், மற்றும் இந்நாட்டுப் பெண்களைத் திருமணம் செய்துள்ளோரும் அடங்குவர் எனச் சொல்லப்படுகிறது.

# மரம் வளர்ப்புக்கு மூன்றாண்டுத் திட்டம்

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் மாணவர் மத்தியில் அறிமுகம்

**மாணவர்கள் மர நடுகையில் ஆர்வத்தோடு ஈடுபடுவதை ஊக்குவிப்பதற்கான தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆக்கபூர்வமான பயன்தரவல்ல சிறந்த திட்டம் ஒன்றை வகுத்துள்ளது.**

**பாடசாலை மாணவர்கள் பங்குபற்றும் திட்டம், மாணவர்கள் சுயமாகவே பங்குபற்றும் திட்டம், பாடசாலைகள் பங்குபற்றும் திட்டம் என மூன்று பிரிவுகளில் இத்திட்டத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் செயற்படுத்த உள்ளது. விவரம் வருமாறு:-**

### பாடசாலை மாணவர் பங்கு பற்றும் திட்டம்:

பாடசாலை மாணவர் ஒருவர் தமது வீட்டுக்கு அருகாமையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அனுமதிக்கும் இடத்தில் ஐந்து மரக்கன்றுகளை நடுகை செய்ய வேண்டும். அவ்விடம் வீதி ஓரமாகவோ அன்றி பொது இடமாகவோ இருக்கும்.

நடுகைக்காக மரக்கன்றுகள் கொடுக்கப்படும். அத்துடன் ஒவ்வொரு மரத்தையும் அடைத்துப் பராமரிப்பதற்கு ரூபா 100/- கொடுக்கப்படும். இம்மரங்கள் மூன்று ஆண்டு காலத்திற்கு மாணவரால் நீர் ஊற்றிப் பராமரிக்கப்படும். பராமரிக்கின்ற காலத்தில் ஒவ்வொரு மாதமும் ரூபா 25/- வீதம் அம்மாணவரின் பெயரில் சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்படும். வைப்புச் செய்யப்படும் சேமிப்புப் புத்தகம் மாணவனிடம் கையளிக்கப்படும். ஒரு மாணவனுக்கு மாதம் 25/- வீதம் 36 மாதங்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும். தெரிவு செய்யப்படவுள்ள மாணவர்கள் எண்ணிக்கை 1,000 ஆகும். இத்திட்டத்தில் கலந்து கொள்வோர் 6 ஆம் ஆண்டு முதல் 10 ஆம் ஆண்டு வரையானவர்களாக இருக்க வேண்டும்.

மரங்களை நட்டு பராமரித்து வளர்த்தெடுப்பதில் முதன்மைபெறும் மாணவர்களுக்குச் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன. இப்பரிசுகள் ஒவ்வொரு வருடத்திலும் மாணவர்களைத் தெரிவு செய்து வழங்கப்படும். தெரிவு அக்டோபர் மாதத்தில் நடைபெறும்.

#### பரிசுகள்

1. கல்விக்கோட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று மாணவர்களுக்கும் ஒவ்வொரு கோட்டத்திலும் பின்வருமாறு பரிசுத் தொகை வழங்கப்படும்.

1 ஆம் இடம் — ரூ. 5,000/-
2 ஆம் இடம் — ரூ. 2,500/-
3 ஆம் இடம் — ரூ. 1,250/-

2. மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று மாணவர்களுக்குமான பரிசுத் தொகை பின்வருமாறு அமையும்:-

1 ஆம் இடம் — ரூ. 10,000/-
2 ஆம் இடம் — ரூ. 5,000/-
3 ஆம் இடம் — ரூ. 2,500/-

### சுயமாகவே நடும் திட்டம்:-

தாமாக முன்வந்து வீதியோரம் அல்லது பொது இடங்களில் மரத்தினை நட்டு பராமரிப்பதில் முதன்மை பெறும் மாணவர்களுக்கும் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கிக் கௌரவிக்கப்படும்.

ஒவ்வொரு கல்விக்கோட்டத்தில் இருந்தும் வருடா வருடம் 10 பேர் தெரிவுசெய்யப்படுவார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் பரிசுத் தொகையாக ரூபா 3,000/- கொடுக்கப்படும். ஆனால் பராமரிப்பதற்கு எவ்வித செலவும் கொடுக்கப்படமாட்டாது.

மரங்களின் எண்ணிக்கை, செழிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் தெரிவுக்கான மதிப்பீடு நடைபெறும். இவ்வாண்டு தாமாகவே மரங்களை நட்டுப் பராமரிப்பவர்கள் அடுத்த நிதியுதவியுடன் நடும் திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

### பாடசாலைகள் பங்குகொள்ளும் திட்டம்:-

வருங்கால சந்ததியினரின் தேவைகளை அச்சந்ததியினருக்கு உணர்த்தி ஊக்கமுடன் செயற்படும் நிறுவனமாகப் பாடசாலைகள் இருப்பதால் [illegible] இயக்கத்தில் ஊக்கத்துடன் பங்குகொள்ளும் நோக்கில் இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுவது எதிர்பார்க்கப்படுகிறது;

1. தெரிவு செய்யப்பட்டு குறித்தொதுக்கிய இடத்தில் மரம் நட்டுப் பராமரிக்கின்ற மாணவர்களினதும், தாமாக முன்வந்து வீதி ஓரத்தில் அல்லது பொது இடங்களில் மரங்களை நடுகின்ற மாணவர்களினதும் செயற்பாட்டை ஊக்கப்படுத்தி ஒழுங்காகக் கண்காணிப்புச் செய்தல்

2. பாடசாலை வளவிலோ அல்லது பொது இடங்களிலோ பாடசாலைகள் தாமாக மரங்களை நட்டுப் பராமரித்தல். ஒரு பாடசாலை குறைந்தது பத்து மரங்களையாவது நட்டுப் பராமரிக்க வேண்டும்.

3. பாடசாலை மாணவர்களிடையில் மரநடுகை தொடர்பாக அறிவினை வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

மேற்குறித்த செயற்பாட்டினைத் திறம்படச் செய்கின்ற பாடசாலைகளைத் தெரிவுசெய்து அவற்றிற்கு சான்றிதழ்களும், ஒரு தொகைப் பரிசுகளும் வழங்கப்படும். இச்செயற்பாடு 1992ஆம் ஆண்டு அக்டோபரிலிருந்து தொடங்கி 1993ஆம் ஆண்டு செப்டம்பர் வரை நீடிக்கும். மூன்று வருட காலத்திற்கு வருடா வருடம் பரிசுகள் வழங்கப்படும்.

கோட்ட மட்டத்தில் தெரிவுசெய்யப்படும் பாடசாலைகளுக்கான பரிசுகள் பின்வருமாறு அமையும்:-

1ஆம் இடம்—ரூ. 10,000/-
2ஆம் இடம்—ரூ. 5,000/-
3ஆம் இடம்—ரூ. 2,500/-

மாவட்ட மட்டத்தில் தெரிவுசெய்யப்படும் பாடசாலைகளுக்கான பரிசுகள் பின்வருமாறு அமையும்:-


1ஆம் இடம்—ரூ. 50,000/-
2ஆம் இடம்—ரூ. 30,000/-
3ஆம் இடம்—ரூ. 15,000/-

மரம்நடுகைத் திட்டத்தில் பங்குகொள்ள விரும்பும் மாணவர்களும் பாடசாலைகளும் மாதிரிப் படிவத்தைத் தயாரித்து பூர்த்திசெய்து அனுப்பி வைக்க வேண்டும்.

சகல விண்ணப்பங்களும் கீழே விலாசமிடப்பட்டுள்ள எமது தலைமைக் காரியாலயத்துக்கோ அல்லது எமது பிரிவுக் காரியாலயத்துக்கோ அனுப்பிவைக்கலாம்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம், 83/2, காங்கேசன்துறை வீதி, கொக்குவில்.

உ




## என்றும் நல்ல முருகன்

**பல்லவி**

நல்லைமுருகன் என்றும் நல்லமுருகன் தினம்
வல்லைவடி வேலேந்தும் வள்ளி மணவாளன்

**அநுபல்லவி**

இல்லை யென்னாதுநல் இன்பமளிப்பான் குகன்
ஈராறு தோள்களுடன் இலங்கிடும் வேந்தனவன்
[நல்லை]

**சரணம்**

உள்ளந்தனில் உவகைபொங்கப் பாடிடுவோம் புகழ்
கள்ளமில்லாத்தூய உள்ளம்கருணையுடன் தந்திடுவான்
வெள்ளம்போல் பக்தர்கள் வேண்டியே வணங்கிடுவார்
தென்றுதமிழ் மாலைபாடித் தேவாதிதேவ என்று
[நல்லை]

— எஸ். ஆர். திருஞானசம்பந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் இன்று உப ஜனாதிபதி தேர்தல்

புதுடில்லி, ஆக. 19

இந்தியாவின் உப ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் இன்று புதன் கிழமை நடைபெறுகிறது.

வாக்களிப்பு நாடாளுமன்றக் கட்டடத்தில் இடம்பெறும். லோகசபை மற்றும் ராஜ்யசபை ஆகியவற்றில் அங்கம் வகிக்கும் எம். பிக்கள் அனைவரும் இத் தேர்தலில் வாக்களிக்கும் தகைமையைப் பெற்றுள்ளனர்.

வாக்குகள் எண்ணப்படுவது உடனே ஆரம்பமாகி, தேர்தல் முடிவு இன்று மாலையே அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்திரா காங்கிரஸ் வேட்பாளராக திரு. கே. ஆர். நாராயணனும் சுயேச்சை வேட்பாளராக ஜோகிந்தர் சிங்கும் இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர். [உ-எ]

# குணரத்ன எம்.பி. மீதான லலித்தின் வழக்கு தள்ளுபடி

சுதந்திரக் கட்சி எம்.பியான கி. வி. குணரத்னா மீது முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி தாக்கல் செய்த மான நஷ்ட வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

1988 செப்டம்பரில் எகலியகொடவில் நடந்த கூட்டம் ஒன்றில் தமக்கு அவதூறு தரும் வகையில் குணரத்னா பேசினார் என்று லலித் அத்துலத்முதலி இவ் வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

50 லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கக் கோரித் தாக்குதல் செய்யப்பட்ட வழக்கை கொழும்பு மாவட்ட நீதிபதி கொலின் ஏ. சமரசிங்கா தள்ளுபடி செய்து நேற்றுத் தீர்ப்பளித்தார் [அ]

# வடக்கில் விசேட பரீட்சை இனி நடத்தப்படமாட்டாது

## அமைச்சர் ஹமீத் நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஆக. 19

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் கடந்த 3வருடங்களாக விசேட பரீட்சைகள் நடத்தப்பட்டன. இனி வரும் காலங்களில் அவ்வாறான சலுகைகளை நிறுத்த முடிவு செய்துள்ளேன்.

நீதி, உயர் கல்வி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீது நேற்று நாடாளுமன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் ஹமீத்தின் முடிவை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பரவலாக வரவேற்றனர். [உ-த]

## அரச தரப்புக் காடையரால்

# 'அத்த' பத்திரிகையாளர் நேற்றுத் தாக்கப்பட்டார்

கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகையான 'அத்த' வின் அரசியல் கேலிச் சித்திரம் வரையும் கார்ட்டூனிஸ்ட் ஜீப்ரி ஜூனிஸ் நேற்றுக் கொழும்பில் அரச ஆதரவுக் கும்பலினால் தாக்கப்பட்டார்.

ஜீப்ரி ஜூனிஸ் அரசுக்கெதிராகவும், பிரேமதாஸாவுக்கு எதிராகவும் கேலிச்சித்திரங்களை வரைந்து வந்தவர் என்றும் —

அராலிச் சம்பவத்தில் படையினர் உயிரிழந்த பின்னர் அவரது படைப்புகள் அரசாங்கத்தையும், பிரேமதாஸாவையும் மிகவும் கடுமையாகத் தாக்குபவையாக அமைந்தன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

"சுதந்திர பத்திரிகையாளர்" என்ற இயக்கத்தினர் பத்திரிகையாளருக்கு பாதுகாப்பு வேண்டும் எனக் கோரும் துண்டுப் பிரசுரங்களை கொழும்பின் பிரதான பகுதிகளில் விநியோகித்துக் கொண்டிருந்தபோதே தாக்குதல் நிகழ்ந்தது

இந்த இயக்கத்தினர் இன்று நண்பகல் கொழும்பில் ஆர்ப்பாட்டப் போராட்டம் ("பிக்கெட்டிங்") ஒன்றை நடத்த ஏற்பாடு செய்திருந்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது. [உ-த]

## ஆஸ்பத்திரி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

னர். எனினும் தெய்வாதீனமாக எவரும் காயமடையவில்லை.

கொட்டடி, யாழ். நகரம், வண்ணை சிவன் கோவிலடி, சிவலிங்கப் புளியடி, பிறவுண் வீதி, சந்தர்மடம், நல்லூர் கோயில் வீதி ஆகிய பகுதிகளில் பரவலாக 50 கலிபர் சன்னங்கள் விழுந்துள்ளன. இச்சன்னங்கள் பல வீடுகளின் ஓடுகளில் துளை போட்டிருந்ததையும் காணமுடிந்தது.

யாழ். கரையோரப் பகுதிகளை நோக்கி மண்டைதீவிலிருந்து ஷெல் தாக்குதலும் நடத்தப்பட்டது

[உ-3-15-30-51-162]


# மரண அறிவித்தல்

## திருமதி ஆசையம்மா வேலாயுதபிள்ளை

மந்துவில் காலம்சென்ற பொன்னையா வேலாயுதபிள்ளை அவர்களின் அன்பு மனைவி ஆசையம்மா அவர்கள் நேற்றுக் [18-08-92] காலமானார்.

அன்னார் திரு. வே. பொன்னுத்துரை [இளைப்பாறிய கிராம சேவை அலுவலர்], திருமதி ம. கணபதிப்பிள்ளை [ஆசிரியை, ஸ்ரீ பாரதி வித்தியாசாலை, மந்துவில்], பொ. வே. தம்பித்துரை [பொறுப்பதிகாரி, மத்திய மருந்தகம், கைதடி], வே. திசைவீரசிங்கம் [சுவீடன்], செல்வி வே. தங்கரத்தினம் [மிருசுவில்], வே. துரைராஜசிங்கம் [சுவீடன்], வே. ஜெயவீரசிங்கம் [சுவீடன்] ஆகியோரின் அன்புத் தாயாரும், இராஜேஸ்வரி, திரு. மா. கணபதிப்பிள்ளை, செல்வரத்தினம் [ஆசிரியை, மீசாலை விக்கினேஸ்வர ம. வி.] வள்ளிநாயகி [சுவீடன்], செல்வராணி [சுவீடன்], வனஜா [சுவீடன்] ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் [19-08-92] இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
மந்துவில். (22226) வே. பொன்னுத்துரை


# நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஆக. 19

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் உற்சவகாலத்தை முன்னிட்டு ஆலய சுற்றாடலில் — 17 ஆம் திருவிழாவான —இன்று புதன்கிழமை நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ கிழக்கு வாசல் முருகன் தண்ணீர்ப்பந்தலில் [மாலையில்] சாந்தனின் இன்னிசைக் கச்சேரி.

★ மேற்கு வீதியில் பிள்ளையார் ஆலய முன்றலில் [மாலையில்] — கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் "பானு கோபன் யுத்தம்" என்ற பொருளில் கதாப் பிரசங்கம்.

★ நல்லை ஆதீனத்தில் பிற்பகல் 2 00 மணிக்கு — கந்த புராணப் படிப்பு, பிற்பகல் 3.00 மணிக்கு — பௌராணிகர் மு. தியாகராசாவின் "முருக இலக்கியங்கள்" தொடர் விரிவுரை.

[உ-126-30]

# மகாவலி பிரதேசத்தில் தங்கம்

மகாவலித் திட்டத்தின் கீழ் அங்கும் கிரி இபனார என்ற இடத்தில் தங்கப் படிமங்கள் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது

தங்கத்துடன் சேர்மதியான வேறு உலோகங்கள் காணப்பட்டதை அடுத்து தொடர்ந்து செய்யப்பட்ட ஆராய்ச்சிகளில் தங்கம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதாம்.

தங்க அகழ்வு வேலைகளை மகாவலி வேலைவாய்ப்பு முதலீட்டு நிறுவனம் விரைவில் ஆரம்பிக்க உள்ளது.

பண்டைய மன்னர் காலத்தில் கிரி இபனாரப் பகுதியில் தங்கம் தோண்டி எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## ஆணைக்குழு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அந்த ஆணைக்குழுவின் அறிக்கையின் ஒரு பகுதி மே 29 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கை முஸ்லிம் ஊர்காவலரை நேரடியாகக் குற்றம் சாட்டியது. இரண்டாவது (தமிழர்கள் மீதான) படுகொலைச் சம்பவத்துக்கு அந்தச் சம்பவம் நடக்க வசதியாக தமது நிலைகளிலிருந்து வெளியேறிச் சென்ற பொலீஸாரையும் அந்த அறிக்கை மறைமுகமாகச் சாடியது.

இரண்டாவது படுகொலைச் சம்பவம் நடப்பதை இராணுவம் ஏன் தடுக்கவில்லை என்பதற்கு மேல் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அந்த அறிக்கை மேலும் சிபாரிசு செய்தது.

ஆனால் அரசாங்கம் அந்த அறிக்கையை திருப்பி எழுதப்பட வேண்டும் என்று வேண்டியது.

புதிய அறிக்கை பெரும்பான்மையான குற்றச்சாட்டுகளை ஊர்காவலர் மீதே சுமத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இராணுவம் மற்றும் பொலீஸ் பற்றி பிரஸ்தாபிக்கப்படுவது புதிய அறிக்கையில் இருந்து அகற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொலைக்குற்றத்துக்காக ஊர்காவலர்கள் நீதிமன்றங்களின் முன் விசாரணைக்கு நிறுத்தப்படுவர் என்று இராணுவப் பேச்சாளர் ஒருவர் கூறுகிறார்.

அதேவேளை —

ஊர்காவலர்களை சேவையில் ஈடுபடுத்துவதா என்பதை அரசு மறுபரிசீலனை செய்யும் என்கிறார் ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் ஒருவர்.

கடந்த வாரத்தில் ஒரு முஸ்லிம் ஊர்காவலர்களும், பல தமிழ்க் கிராம வாசிகளும் கைது செய்யப்பட்டனர்.

— இவ்வாறு அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

# முஸ்லிம் ஊர்காவலர்கள் கிழக்கில் அட்டகாசம்

அம்பாறை மாவட்டத்தில் வீரமுனைக் கிராமத்தில் பலவந்தமாகக் குடியேற்றப்பட்ட தமிழ் மக்கள் மீது முஸ்லிம்களும் ஊர்காவலரும் அட்டகாசத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கில் ஸ்ரீலங்கா இராணுவம் தாக்குதலை நிறுத்திய பின்னர், கடந்த வியாழக்கிழமை முதல் முஸ்லிம், ஊர்காவலரின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாகவும் —

ஸ்ரீலங்கா பொலிஸார் அங்கு பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வீரமுனையில் இருந்த தமிழ் மக்கள் தப்பி ஓட வழி இல்லாததால், அவர்கள் மத்தியில் பெரும் பதற்றம் நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

# கனத்தைச் சம்பவங்களின் பின்னணியில் ஜே. வி. பி.?

கடந்த வாரம் கொழும்பு கனத்தையில் ஸ்ரீலங்கா தளபதிகளின் மரணச் சடங்கு நடைபெற்ற சமயம் ஏற்பட்ட குழப்பங்களின் போது ஜே. வி. பியில் முன்னர் இருந்த சில சக்திகளைக் காணக்கூடியதாகவிருந்தது.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் இத்தகவலை வெளியிட்டார்.

அராலித்துறை கண்ணிவெடியில் படைத் தளபதிகள் உயிரிழந்த இடம் வீடியோ படமாக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

அராலித்துறைச் சம்பவம் பற்றி விசாரணை நடத்த இராணுவச் சட்டத்தின் கீழ் விசாரணை நீதிமன்றம் ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாதுகாப்பு அமைச்சு தனிநபர் ஆணைக்குழு ஒன்றையும் நியமித்துள்ளது. இவற்றின் விசாரணைகள் முடிவடைந்த பின்னர் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.— என்றார் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா. [உ-எ]

# ஓய்வூதியருக்கு ஏற்பட்ட நஷ்ட விவரங்கள் மதிப்பீடு

யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளினால் அரச ஓய்வூதியம் பெறுவோருக்கு ஏற்பட்டுள்ள உடைமைச் சேதங்கள் குறித்து மதிப்பீடு செய்யப்படவிருக்கிறது.

இதற்காக, ஓய்வூதியம் பெறுவோர் தமக்கு ஏற்பட்ட நஷ்ட விவரங்களை தனக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கேட்டிருக்கிறார். [உ-162]

# அநாதை இல்லங்கள் குறித்து விவரங்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 19

யாழ். மாவட்டத்தில் இயங்கும் அநாதைச் சிறுவர் இல்லங்கள் பற்றிய விவரங்கள் திரட்டப்படவிருக்கின்றன.

அநாதைச் சிறுவர் இல்லங்களின் பெயர், இடம், பொறுப்பாளர் விவரம், வங்கிக் கணக்கு இலக்கம், இல்லங்களின் செயற்பாட்டு அறிக்கை, அது சம்பந்தமான புகைப்படங்கள் ஆகியவை பற்றிய விவரங்களை தமக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். அரசஅதிபர் கோரியுள்ளார்.

யாழ். மாவட்ட அநாதைச் சிறுவர் இல்லங்களுக்கு வழங்குவதற்காக, ஜேர்மன் வாழ் தமிழ் மக்களிடம் அங்குள்ள தமிழர் அமைப்பு ஒன்று நிதி சேகரித்திருப்பதாகவும்—

அந்த நிதியை அநாதை இல்லங்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காகவே அவற்றின் விவரம் திரட்டப்படுகிறது என்றும் தெரிய வருகிறது.

[உ-162]

## விக்கிரகங்கள் மீட்பு

மண்டுவில் குமரகோட்டம் முருகமூர்த்தி ஆலயத்தில் அண்மையில் திருட்டுப் போன தெய்வ விக்கிரகங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இவ் விக்கிரகங்கள் இந்த ஆலயத்திற்கு அருகேயுள்ள மண்டுவில் சோலையம்மன் ஆலயப் பகுதியில் இருக்கக் காணப்பட்டு மீட்கப்பட்டன. திருடர்கள் அப்பகுதியில் இவைகளைக் கைவிட்டுச் சென்றிருக்கலாம் எனக் கூறப்பட்டது. (உ-140)

# ஜி. சீ. ஈ. [உ. த.] பரீட்சை முடிவுகள் சில தினங்களில்!

— யாழ்ப்பாணம், ஆக. 19

1992 ஏப்ரலில் நடைபெற்ற — 1991ஆம் ஆண்டுக்குரிய — ஜி. சீ. ஈ. (உயர்தர) விசேட பரீட்சையின் முடிவுகள் சில தினங்களில் யாழ்ப்பாணம் வந்து சேரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது

பரீட்சை ஆணையாளரிடம் இருந்து இந்தப் பரீட்சை முடிவுகளை நேற்றுப் பொறுப்பேற்று, செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் அனுப்புவதாக கொழும்பில் தங்கியுள்ள யாழ். அரச அதிபரின் பிரதிநிதி நேற்று யாழ். செயலகத்துக்கு தகவல் அனுப்பியிருந்தார்.

பரீட்சை முடிவு வெளியாவது குறித்து யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளருக்கு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்று பணிப்பாளர் தெரிவித்தார்.

பரீட்சை முடிவுகள் நேற்று மாலைவரை தமது கொழும்பு தலைமையகத்தில் ஒப்படைத்ததாக தகவல் ஏதும் தமக்கு கிடைக்கவில்லை என செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு யாழ். கிளைப் பிரதிநிதி தெரிவித்தார். [உ-3]

## அராலி...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடுவ தமது திட்டங்களை ஆராய்ந்துவிட்டு திரும்பும் போதுதான் அத்தாக்குதல் நடந்தது என்றார் அவர்.

யாழ்ப்பாணத்தை நோக்கிச் செல்வதற்கு இராணுவம் தயாரித்திருந்த அத்திட்டத்துக்கு தமது குழு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருந்தது என்றும்—

தமது குழுவில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல் இல்லை என்றும் திரு. தேவானந்தா மேலும் கூறினார் [உ-எ]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2' இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 19-08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org